# என் உள்ளம் ஆண்டவரைப் போற்றுகின்றது

குழந்தை இயேசுவின் பிறப்பை வானதூதன் மரியாளுக்கு முன்னறிவித்தவுடன் அவர் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அது மட்டுமல்ல உறவினராகிய வயது சென்ற எலிசபெத்தும் குழந்தை வரம் பெற்றுள்ளார் என வானதூதன் செய்தியைக் கேட்டு அளவில்லா ஆனந்தம் அடைந்தார். கலிலேயா நாட்டின் நாசரேத் எனும் நகரில் வாழ்ந்த அவர் எலிசபெத்தைக் காண்பதற்காக நீண்ட பயணம் செய்யத் தீர்மானித்தார். யூதேயா மலைநாட்டில் உள்ள ஒரு ஊருக்கு விரைவாக சென்றாள்.



இருவரும் ஒருவரையொருவர் சந்தித்து வாழ்த்துரைகள் கூறிக் கொண்டனர். மரியாள் மகிழ்வுடன் தனது வேண்டுதலை துதிப் பாடலாக ஏறெடுத்தார்.

## மரியாளின் பாடல்

"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப்
பெருமைப்படுத்துகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து
எனது மனம் பேருவகை கொள்கின்றது.
ஏனெனில் அவர் தம் அடிமையின்
தாழ் நிலையைக் கண்ணோக்கினார்.
இது முதல் எல்லாத் தலைமுறையினரும்
என்னைப் பேறு பெற்றவர் என்பவர்
ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு
அரும் பெரும் செயல்கள் செய்துள்ளார்".

## செயற்பாடு

1. லூக்கா 1 : 46 - 55 வரையிலான மரியாளின் பாடலை வாசிக்கவும்.
2. மரியாள், எலிசபெத் சந்தித்தபோது இருவருக்கிடையே நடைபெற்ற உரையாடலை எழுதவும்.
3. மற்றொருவருக்கு கிடைத்த ஆசீர்வாதத்தை, நீர் எப்படி மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டீர்?